**செப்டம்பர் – 29**

# TNPSC துளிகள்

- மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாளின் இரண்டு ஆண்டு கால கொண்டாட்டங்களை துவங்குவதற்காக நெதர்லாந்தின் ஹேக் பகுதியில் உள்ள சமாதான அரண்மனையிலிருந்து குரோட் கெர்க் பகுதி வரையிலான 'காந்தி நடைப்பயணத்தை' இந்தியா ஏற்பாடு செய்துள்ளது.
- நெவாரி சமூகத்தினரால் 8 நாட்களுக்கு கொண்டாடப்படும் மிக அற்புதமான மற்றும் புகழ்பெற்ற இந்திர ஜாத்ரா திருவிழா 2018 ஆனது நேபாளத்தின் காத்மண்டுவில் தொடங்கப்பட்டது. இத்திருவிழவானது மழை மற்றும் நல்ல அறுவடைக்கான கடவுளான இந்திரனை வணங்குவதற்காக கொண்டாடப்படுகிறது.
- ஐக்கிய அரபு அமீரகமானது அதன் தலைநகரமான அபுதாபியில் மத நல்லிணக்க கூட்டணி கருத்துக் களத்தை வரும் நவம்பர் 19 மற்றும் 20 தேதிகளில் நடத்தவுள்ளது. இந்த கருத்துக் களமானது நவம்பர் 20 அன்று கொண்டாடப்படும் உலக குழந்தைகள் தினத்துடன் ஒருங்கே அமைகிறது.
- மூத்த இந்திய காவல் பணி அதிகாரிகளான ரஜினிகாந்த் மிஸ்ரா மற்றும் S.S. தேஸ்வால் ஆகியோர் முறையே எல்லைப் பாதுகாப்புப் படை (BSF - Border Security Force) மற்றும் சாஸ்த்ரா சீமா பால் (SSB – Sastra Seema Bal) ஆகியவற்றின் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
  - தற்போது SSB-யின் தலைவராக உள்ள மிஸ்ரா, K.K ஷர்மாவுக்கு பதிலாகவும் மிஸ்ராவுக்குப் பதிலாக தேஸ்வாலும் பதவியேற்பர்.
- ஹைதராபாத்தில் நடைபெற்ற WAN-IFRA 2018-ன் 26வது மாநாட்டின் 3 வது தெற்காசிய டிஜிட்டல் ஊடக விருது வழங்கும் விழாவில் தி இந்து-வின் கைபேசி செயலியான பிரீஃப்கேஸ் (Briefcase) ஆனது சிறந்த டிஜிட்டல் செய்திகளை வழங்கும் புது நிறுவனத்திற்க்கான வெள்ளிப் பதக்கத்தை வென்றது.
  - வெள்ளிப் பதக்கமானது சாகல் மீடியாவின் அக்ரோவொன் செயலிக்கும் வழங்கப்பட்டது. அதே சமயம் தங்கப் பதக்கத்தை சென்னை கொரியர் செயலியானது வென்றுள்ளது.
- கூகுள் நிறுவனமானது அதன் மிக பிரபலமான தேடல்களைக் கொண்ட சிறப்பு டூடுளுடன் தனது 20 வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. கூகுளானது செப்டம்பர் 4 அன்று ஏற்படுத்தப்பட்ட போதிலும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 27 அன்று அதன் பிறந்த நாளைக் கொண்டாடுகிறது.

# தேசியச் செய்திகள்

## வாழ்வதற்கு உகந்த குறியீட்டு தரவரிசை - AMRUT

- வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் (MoHUA) அறிமுகப்படுத்தப்பட்ட வாழ்வதற்கு உகந்த குறியீட்டு தரவரிசை 2018ல் ஆந்திரப் பிரதேசமானது முதலிடத்தில் உள்ளது.

- ஒடிசா மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகியவை முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தில் சிறந்த மாநிலமாக உள்ளன.
- இந்த வாழ்வதற்கு உகந்த குறியீடானது அம்ருத் அமைச்சகத்தின் (புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் திட்டம் - Atal Mission for Rejuvenation and Urban Transformation/AMRUT) உருமாற்றும் முயற்சியாகும்.
- ஜனவரி 2018-ல் வெளியிடப்பட்ட முதல் குறியீட்டின் முதல் பதிப்பில் 111 இந்திய நகரங்கள் மதிப்பிடப்பட்டு அதில் புனே முதலிடத்தைப் பிடித்து இருந்தது.

## தெலுங்கானாவில் தேர்தல் நடத்தை விதிகள் அமல்

- இந்திய தேர்தல் ஆணையமானது தெலுங்கானாவில் தேர்தல் நடத்தை விதிகளை அமலுக்கு கொண்டு வந்துள்ளது.
- மேலும் தேர்தல் ஆணையமானது தற்போதுள்ள பொறுப்பு அரசாங்கமானது எந்தவொரு பெரிய கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும் தடைவிதித்துள்ளது.
- முன்கூட்டியே சட்டசபை கலைக்கப்படும் மாநிலங்களில் மத்திய மற்றும் அரசாங்கங்கள் புதிய திட்டங்களை அறிவிப்பதை தடுப்பதற்காக உடனடியாக தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்படும் என அண்மையில் தேர்தல் ஆணையமானது அறிவித்துள்ளது.
- தேர்தல் தேதிகள் அறிவிக்கப்படாமலேயே ஒரு மாநிலத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுவது இதுவே முதன்முறையாகும்.
- 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் ஆட்சிக் காலம் உள்ள போதிலும் செப்டம்பர் மாதம் தெலுங்கானா சட்டசபை கலைக்கப்பட்டது.

## உள்துறை அமைச்சகத்தின் கீழ் 6 யூனியன் பிரதேச காவல் துறைகள் இணைப்பு

- மத்திய உள்துறை அமைச்சகமானது ஆறு யூனியன் பிரதேசங்களின் காவல் துறைகளை இணைப்பதற்கான புதிய விதிகளை அறிவித்துள்ளது.
- இந்த விதிகளானது நேரடியாக இந்திய காவல் பணி (IPS – Indian Police Service) அலுவலராக நியமிக்கப்படாத அதிகாரிகளையும் மத்திய உள்துறை அமைச்சகத்தின் வரம்பிற்குள் 6 யூனியன் பிரதேசங்களில் எந்தொரு இடத்திலும் பணியமர்த்துவதற்கு வழி செய்கிறது.
- டெல்லி, அந்தமான் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவுகள், டாமன் மற்றும் டையூ, தாத்ரா நகர் ஹவேலி மற்றும் சண்டிகர் (காவல் பணி) விதிகள் 2018 ன் கீழ் மத்திய உள்துறை அமைச்சகமானது இதை அறிவித்துள்ளது.
- இது, ஒரு மத்திய காவல் பணிநிலைப் பிரிவை உருவாக்குவதற்கான முதல் படியாகும்.

# சர்வதேசச் செய்திகள்


## முதலாவது பெண்கள் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு

- கனடாவின் மாண்ட்ரியலில் முதன்முதலாக பெண் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மட்டுமே பங்கேற்ற மாநாடு நடைபெற்றது.
- இந்த மாநாட்டின் நோக்கமானது அரசியல் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைகளில் பெண்களின் பங்களிப்பை சுட்டிக் காட்டுதல் ஆகும்.
- இந்த கூட்டமானது கனடாவின் சிறந்த இராஜதந்திரியான கிறிஸ்டியா ஃப்ரீலாண்ட் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத்துறை பிரிதிநிதியான ஃபெடரிகா மொஹெரினி ஆகியோரால் தலைமை தாங்கப்பட்டது.



## உலகளாவிய சதுப்புநில கண்ணோட்ட அறிக்கை

- உலகளாவிய ஈர நில கண்ணோட்ட அறிக்கையானது ராம்சார் சதுப்புநில உடன்படிக்கையினால் வெளியிடப்பட்ட முதலாவது சதுப்புநிலம் குறித்த அறிக்கை ஆகும்..
- இந்த அறிக்கையின்படி
  - 1970 - 2015 ஆகியவற்றின் இடைப்பட்ட 45 ஆண்டு கால அளவில் உலகின் 35% சதுப்பு நிலங்கள் அழிந்துவிட்டன.
  - வருடாந்திர சராசரி ஈர நில இழப்பானது 0.78% என்ற அளவில் உள்ளது. இது எதிர்காலத்தில் கடுமையான விளைவுகளை அளிக்கும்.
  - 1990 - 2015க்கு இடைப்பட்ட கால அளவில் சராசரி வருடாந்திர இழப்பு வீதத்தை விட 3 மடங்கு வேகத்தில் வருடத்திற்கு 0.24% அளவிற்கு நீர் விநியோகத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அளவிற்கு ஈர நிலங்கள் குறைந்துள்ளன.
  - 80% க்கும் அதிகமான அளவில் கழிவுநீர்கள் போதிய அளவுக்கு சுத்திகரிக்கப்படாமல் சதுப்பு நிலங்களில் வெளியிடப்படுகின்றன.
- சதுப்பு நிலங்கள் குறைவதற்கான காரணங்களாவன
  - காலநிலை மாற்றம், மக்கள்தொகை பெருக்கம், நகர்மயமாதல் (குறிப்பாக கடற்கரை மண்டலங்கள் மற்றும் ஆற்றுச் சமவெளிப் பகுதிகள்).
  - நுகர்வு முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் விவசாயம் மற்றும் நிலம் மற்றும் நீர் ஆகியவற்றை பயன்படுத்துவதில் ஏற்பட்ட மாற்றங்கள்.




# மாநிலச் செய்திகள்

## 2வது மிகப்பெரிய மெட்ரோ ரயில் கட்டமைப்பு

- L & T மெட்ரோ ரயில் ஹைதராபாத் லிமிடெட் நிறுவனமானது அண்மையில் 16 கி.மீ. உயர்த்தப்பட்ட மெட்ரோவை அமைத்துள்ளது.
- இதன் மூலம் 3 தடங்களுடைய ஹைதராபாத் மெட்ரோ ரயில் (HMR) திட்டத்தின் ஒரு முழு நீளத்தை அந்நிறுவனம் நிறைவு செய்துள்ளது.
- தற்போது, ஹைதராபாத் மெட்ரோ தடத்தின் மொத்த நீளம் 46 கி.மீ. ஆகும். இதன் மூலம் டெல்லி மெட்ரோவிற்கு அடுத்தபடியாக இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய செயல்படும் மெட்ரோ இரயில் கட்டமைப்பாக ஹைதராபாத் மெட்ரோ உருவெடுத்துள்ளது.
- இந்த HMR திட்டமானது உலகின் மிகப்பெரிய அரசு தனியார் கூட்டு (PPP – public Private Partnership) திட்டமாகும்.

# முக்கிய தினங்கள்

## உலக மருந்தாளுனர் தினம் - செப்டம்பர் 25

- உலக மருந்தாளுனர் தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 25-ம் தேதி மருந்தாளுனர்களின் தொழிலை ஊக்குவிப்பதற்காகவும் ஆதரிப்பதற்காகவும் கடைபிடிக்கப்படுகிறது.
- 2018 உலக மருந்தாளுனர் தினத்தின் கருத்துருவானது 'மருந்தாளுனர்கள் : உங்கள் மருந்துகளின் நிபுணர்கள்' (Pharmacists: your medicines experts) என்பதாகும்.
- உலக மருந்தாளுனர் தினமானது முதன்முதலில் 2009 ஆம் ஆண்டு துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள சர்வதேச மருந்தக கூட்டமைப்பு மன்றம் மூலமாக அனுசரிக்கப்பட்டது.




## அந்தியோதயா திவாஸ் - செப்டம்பர் 25

- செப்டம்பர் 25 ஆம் நாள் பண்டிதர் தீனதயாள் உபாத்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு நாடெங்கிலும் அந்தியோதயா திவாஸ் அனுசரிக்கப்படுகிறது.
- அந்தியோதயா என்பதன் பொருள் சமுதாயத்தின் பிற்படுத்தப்பட்டோரை உயர்த்துதல் என்பதேயாகும்.

## உலக சுற்றுலா தினம் - செப்டம்பர் 27

- உலக சுற்றுலா தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 27 அன்று சுற்றுலாவின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கொண்டாடப்படுகிறது.
- இந்த வருடத்தின் கருப்பொருளானது 'சுற்றுலா மற்றும் டிஜிட்டல் மாற்றம்' (Tourism and the Digital Transformation) என்பதாகும்.
- சுற்றுலாவின் முக்கியத்துவம் மற்றும் அதன் சமூக, கலாச்சார, அரசியல் & பொருளாதார மதிப்பு ஆகியவற்றைக் குறித்து சர்வதேச சமூகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாக இத்தின அனுசரிப்பு கொண்டுள்ளது.
- உலக சுற்றுலா தினமானது, 1970 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 அன்று ஐ.நா. சுற்றுலா அமைப்பின் (UNWTO – United Nations World Tourism Organization) விதிகளை ஏற்றுக் கொள்ளப்பட்ட நாளைக் குறிக்கிறது.




## உலக கடல் தினம் - செப்டம்பர் 27

- உலக கடல் தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் கடைசி வியாழக்கிழமையன்று கடைபிடிக்கப்படுகின்றது.
- கடல் பாதுகாப்பு, கடல் போக்குவரத்து பாதுகாப்பு மற்றும் கடல் சூழல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதோடு கடல் தொழில் துறையை ஏற்றுக் கொள்வதும் இதன் நோக்கமாகும்.
- இந்த வருடம் செப்டம்பர் 27ம் தேதியன்று 'IMO 70 : நமது மரபுரிமை - சிறந்த எதிர்காலத்திற்கான சிறந்த கடல் போக்குவரத்து' (IMO 70: Our Heritage – Better Shipping for a Better Future) என்ற கருத்துருவுடன் இத்தினம் அனுசரிக்கப்பட்டது.
- உலக கடல் தினமானது 1958 ஆம் ஆண்டில் சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO – International Maritime Organization) விதிகளை ஏற்றுக் கொள்ளப்பட்ட தினத்தைக் குறிக்கிறது. இத்தினமானது முதன்முதலில் 1978-ல் கொண்டாடப்பட்டது.

IMO 70
OUR HERITAGE
BETTER SHIPPING FOR A BETTER FUTURE

- - - - - - - - - - - - - - -